பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 27 புதன்கிழமை 13.12.2023 கதிர் 397

# புலம்பெயர் தமிழர் என்ற அடையாளத்தை நீக்க உலகத் தமிழர் பேரவையிடம் சஜித் வலியுறுத்து

## புலம்பெயர் இலங்கையர்கள் என்று மாறவேண்டுமாம்

**புலம்பெயர் தமிழர்கள் என்ற அடையாளத்திலிருந்துவெளிவர வேண்டும். அனைவரும் 'புலம் பெயர் இலங்கையர்கள்' என்ற அடையாளத்தினை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச இமயமலைப் பிரகடனக்காரர்களான சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தின் மற்றும் உலகத் தமிழர் பேரவையினரிடம் வலியுறுத்தினார்.**

**அத்தகைய ஒரு நிலையை அடைய வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளதுஎன்றுஅதற்குப் பதிலளித்த உலகத் தமிழர் பேரவையினர், அதை நோக்கிய பயணத்தின் முதற்படிதான்** ☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ். குடாநாட்டைச் சுற்றியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய 3 தீவுகளிலும் உள்ள மக்களுக்கு மின்சாரத்தைத் தடையின்றி வழங்குவதற்காக அந்தத் தீவுகளில் சூரிய மின் சக்தித் திட்டத்தை தீவகத்தில் சீன நிறுவனம் ஒன்று சூரிய மின்சக்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை 2021இல் அனுமதித்திருந்தது.

ஆனால், இந்தியா அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. தென்னிந்தியாவிற்குமிகநெருக்கமாக இருக்கும்இந்தத்தீவுகளில்சீனாவின் ஊடுருவல் என்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று புதுடில்லி அச்சமடைந்தது. அதனால் அந்தத் திட்டத்தில் இருந்து ☞2

## பூநகரி குள மேற்பரப்பில் சூரிய மின் சக்தித் திட்டம்

### ஆஸி. நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கிளிநொச்சி - பூநகரி குளத்தின் மேற்பரப்பில்சூரிய மின்சக்தி திட்டத்தை நிறுவுவதற்காக அவுஸ்திரேலியாவுடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது எக்ஸ் மு தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

இதன்படி, ஆயிரத்து 500 மெகாவோட் ஆற்றல் ☞2

## நடுத்தர மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் வரிக் கொள்கையினைத் தவிர்த்துவிடுங்கள்

### அரசிடம் எரான் வலியுறுத்து

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வரி கொள்கையை தவிர்த்துநடைமுறையில் உள்ள வரி கொள்கை வலையமைப்பைசிறந்த முறையில் முறையாக செயற்படுத்தினால்தேசிய வரி வருமானத்தை முறையாக பெற்றுக் கொள்ளலாம் என்று நாடாளுமன்றஉறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 வரவு செலவுத் திட்டத்தின் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர்இதனைத்தெரிவித்தார்.

அவர் தனது உரையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆளும் தரப்பு எடுக்கும் தீர்மானங்கள் நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

வரிக்கொள்கையால் ஒட்டுமொத்த மக்களும் சொல்லனாதுயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள். நடுத்தர மக்கள் தமது அன்றாட தேவைகளைக்கூட நிறைவேற்றிக் கொள்ளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வதை நாங்கள் தடுக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டு ஆளும் தரப்புச் செயற்படுகிறது. நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்குமாறு வரி விதிக்க நாணய நிதியம் ☞2

## "யாழ்ப்பாணத்திற்கு நதி"

வடக்கிற்கு நீர் வழங்குவதில் கவனம் செலுத்தி யாழ்ப்பாணத்திற்கு நதி ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வனவிலங்கு மற்றும் வனவளங்கள்பாதுகாப்பு நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

2024 வரவு செலவுத் திட்டத்தின் நீர்ப்பாசன அமைச்சின் ஒதுக்கீடு மீதான விவாதத்தில் நேற்று நாடாளுமன்றத்தில் பாராளுமன்றத்தில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

"யாழ்ப்பாண நதி" எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் முதற்கட்ட ஆய்வுகள் நெதர்லாந்து அரசினால் மேற்கொள்ளப்பட்டன எனவும், அடுத்த கட்டப் பணிகள் 2024 இல் ஆரம்பிக்கப்படும்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்மூலம் வடக்கின் நீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனத் தான் நம்புகின்றார் எனவும் பவித்ரா வன்னியாராச்சி மேலும் தெரிவித்தார்.

இதன்படி, முடங்கிக் கிடக்கும் யாழ்ப்பாணம் அணைக்கட்டுத் திட்டம் அடுத்தஆண்டுமீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் கீழ் இத்திட்டத்தின் ஆரம்பகட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. அதன்படி,திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும்,2024ஆம்ஆண்டு மீண்டும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். ☞2

## மின் சக்தி அமைச்சர் காஞ்சனா உடனே பதவி விலக வேண்டும்

### சோபித தேரர் கொந்தளிப்பு

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான காஞ்சனவிஜேசேகரவும், அமைச்சின்செயலாளரும் உடன் பதவி விலக வேண்டும்என்றுகலாநிதி ஓமல்பே சோபித்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் தடைக்கு பொறுப்பை ஏற்றே இவர்கள் பதவி விலக வேண்டும்எனவும்அவர் கூறியுள்ளார்.

இப்படியான மின் துண்டிப்புகள் இடம் பெறக்கூடும். எனவே, உரிய ஏற்பாடுகள் அவசியம் என பொது பயன்பாட்டு ஆணைக் குழு பரிந்துரை முன் வைத்திருந்தது.எனினும், அந்த பரிந்துரை குறித்துக் கவனம் எடுக்கப்படவில்லை.

தன்னிச்சையாகச் செயற்படும் அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமாகவே மின் தடை ஏற்பட்டுள்ளது. இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்போன்றபெரும் அநியாயமாகும்.

அமைச்சரும், அமைச்சின் ☞2

## கடன் மறுசீரமைப்பின் வெற்றியில் தங்கியுள்ளது வற் வரிக் குறைப்பு

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கடன் மறுசீரமைப்புக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களில் வற் வரியை குறைக்க முடியும். அதற்கமைய முடிந்தளவு மக்களுக்கான சலுகைகளை வழங்க முடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரி பூச்சியத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்படவில்லை. 15 வீதத்திலிருந்து18வீதமாக அதிகரிக்கப்படுகிறது. இது தொடர்பில் போலியான செய்திகள் பகிரப்படுகின்றன. மின்சாரம், இரசாயன உரம், மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், ☞2

## விவசாய ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க ரணில் அரசு முடிவு

எம்மிடம் இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிலப் பரப்பிலிருந்து அதிக விளைச்சலைப் பெற விவசாயத்துடன் தொழில்நுட்பத்தை இணைப்பதே ஒரே வழி. அதற்காகவிவசாய தொழில்நுட்ப முறை தொடர்பில் நாங்கள் ஆராயச்சி நிறுவனம் ஒன்றை நிறுவ இருக்கிறோம் என்று தெரிவித்தார்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயேஇவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து ☞8

## சகல இடங்களிலும் புளிய மரங்கள் நட யாழ். மாவட்டச் செயலாளர் அறிவுரை

யாழ்ப்பாண மாவட்டத்தில்அனைத்துபிரதேச செயலகங்களிலும் பொருத்தமான இடங்களில் புளியமரங்களை நாட்டுமாறு பிரதேச செயலாளர்களுக்கு மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணமாவட்ட செயலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஐம்பது ஆண்டுகளில் பயன்தரு புளியமரங்களைஎவரும் நாட்டியதாக வரலாறு இல்லை. தற்போது உள்ள புளியமரங்கள் எல்லாமேஇயற்கையாக விதைமூலம்பரவியதே. அவையும் தற்போது வெட்டப்பட்டுக் கொண்டிருக் ☞8

## சீனிக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்த குடாநாட்டில் முயற்சி

### பதுக்குகிறார்கள் என்று மாவட்டச் செயலர் குற்றச்சாட்டு

யாழ். குடாநாட்டில் சீனியை பதுக்கி செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதாக மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் குற்றஞ்சாட்டுகிறார்.

செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திற்கு 100 மெற்றிக் தொன் சீனி கூட்டுறவு சமாசம் ஊடாககிடைத்ததுஎன்று தகவல் கிடைத்துள்ளது. உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

இருந்தாலும் சந்தையில் சீனியின் கட்டுப்பாட ☞2

## 108 வருடங்களுக்கு முந்தைய வழக்கு குறித்து மீள்விசாரணை

### தனிக் குழு நியமித்தார் ரணில்

108ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற வழக்குத் தொடர்பில் மீள் விசாரணை நடத்த ஜனாதிபதி ரணில் விகிக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார். இதற்கென ஒரு தனிக் குழுவையும் அவர் நியமித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின்படி கொல்லப்பட்ட எட்வெட் ஹென்றி பேதிரிஸ் படுகொலை தொடர்பான விசாரணைகளைமுன்னெடுப்பதற்கே இந்த தனிக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காலணித்துவ ஆட்சியின் கீழ் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள்,கலவரங்கள் மற்றும் அரசுக்கு எதிராகத் துரோகம் இழைத்தார் எனத் தெரிவித்து இராணுவ நீதிமன்றத்தால் குற்றஞ்சுமத்தப்பட்டு, குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட 27 வயதான எட்வெட் ஹென்றி பேதிரிஸ் 1915.07.07 அன்று எவ்வித மேன்முறை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

# நீரில் மூழ்கி இருவர் சாவு

இக்கொல்லேகல மற்றும் மஹாவெளஆகியநீர்நிலைகளில்நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் கல்கிரியாகம பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர். இவர் மீன் பிடிக்க சென்ற போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மற்றையநபர்62வயதுடையவர் என்பதுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 50 கைதிகள் ஓட்டம்; 21 பேர் மீண்டும் கைது



கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து 50 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் அவர்களைக் கைதுசெய்ய சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 50 கைதிகள் இவ்வாறு தப்பிச் சென்றுள்ள நிலையில், 21 கைதிகள் மீண்டும் பொலி-ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

## இனி இது .....

சீனாவை வெளியேற்ற இந்தியா தனத முழு அழுத்தத்தையும் பயன்படுத்தியது.

தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் போன்று அல்லாமல் இந்தியா கொடுத்த முழு அழுத்தத்தின் காரணமாக இலங்கை ஆட்சியாளர்கள் அவசர அவசரமாக அந்தத் திட்டத்திலிருந்து சீன நிறுவனத்தை வெளியேற்றினார்கள். இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்தது. திட்டத்தை நிறுத்திய இலங்கையைவிட்டுவிட்டு அதற்குக் காரணமான இந்தியாமீது சீற்றத்தை வெளிப்படுத்தியது சீனா.

இந்த விடயத்தில் மூன்றாம் தரப்பினரின், அதாவது இலங்கை மற்றும் சீனா தவிர்ந்த மூன்றாம் தரப்பினரின் தலையீட்டைக் கடுமையாக எதிர்ப்பதாகக் கொழும்பிலிருக்கும் சீனத் தூதுவர் காட்டமாகக் கருத்துக்களையும் தெரிவித்திருந்தார். அதுமட்டுமல்ல இந்தத் திட்டத்தினுள் உள்ளடங்கியிருந்த நயினா தீவிற்கும் அண்மையில் அவர் தனது வடக்குப் பயணத்தின்போது வருகை தந்திருந்தார்.

2021ஜனவரியில் அமைச்சரவை இந்தத் திட்டத்திற்கு சீன நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் இந்திய எதிர்ப்பையடுத்து பின்னர் அது கைவிடப்பட்டது. அதன் பின்னர் கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் கழித்து அந்தத்திட்டத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கான அனுமதியை அமைச்சரவை இந்த வாரம் வழங்கியுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் குடியிருப்போருக்கு மின்சாரம் வழங்குவதற்கான இந்தத் திட்டத்திற்காக 11 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியனுசரணையை இலங்கை அரசுக்கு வழங்குவதற்கு இந்திய அரசு விருப்பம் தெரிவித்திருந்தது.

அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கமைய குறித்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இந்திய ஒப்பந்ததாரர்களிடமிருந்து மட்டும் விலைமனு கோரப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழு சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த ஒப்பந்தத்தை யுசோலர் கிளீன் எனர்ஜி சொலூசன் என்கிற (U-Solar Clean Energy Solutions (Pvt) Ltd) நிறுவனத்துக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்றுமாம் என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இமயமலைப் பிரகடனம் என்றும் தெரிவித்தனர்.

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவையினருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையிலான எதிரணியின் பங்காளிகளுக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை எதிர்க்கட்சித்தலைவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதில், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், லக்ஷ்மன் கிரியெல்ல, ரஞ்சித் மத்துமபண்டார, ஏரான்விக்கிரமரட்ன, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், திகாம்பரம், உதயகுமார், வேலுகுமார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தௌபிக் மற்றும் இலங்கை தமிழ் அரரசு கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அவர்கள் அனைவரிடமும் இமயமலை பிரகடனம் கையளிக்கப்பட்டது. அதனை செயற்பாட்டு ரீதியில் வெற்றி பெறச் செய்வதற்கான ஆழமான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டன.

மதிய விருந்துபசாரத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில் உலகத் தமிழர் பேரவையின் ஊடகப் பேச்சாளர் சுரேன்சுரேந்திரன்தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாசவுடன் நடைபெற்ற சந்திப்பானது மிகவும் முக்கியமானதாக அமைந்தது. அவரது தலைமையிலான எதிரணியின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் மற்றும் முக்கிய உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில், அவருடனான உரையாடலின் போது, இமயமலை பிரகடனத்தை நான்கு பீடாதிபதிகளிடமும் கையளித்து அவர்களிடமிருந்து ஆதரவினையும், ஆசீர்வாதத்தினையும் பெற்றுக்கொண்டமையானது முக்கியமானதொரு விடயம் என்று சுட்டிக்காட்டினார்.

அத்தோடு குறித்த பிரகடனத்தின் உள்ளடகத்தில் காணப்படும் விடயங்களில் மூன்றில் இரண்டு பகுதியானது தனது தேர்தல் அறிக்கையில் காணப்படுவதால் அதனை ஏற்றுக்கொள்வதில் எந்தவிதமான தடைகளும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அதேநேரம், ஒருசில விடயங்கள் சம்பந்தமாக இன்னமும் ஆழமான கலந்துரையாடல்கள் அவசியமாக இருப்பதாகக்கூறியதோடு, அதற்கான முன்னெடுப்புக்களில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணியினர் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என்றும் கூறினார்.

அவரைப் பொறுத்தவரையில், அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தினை உறுதி செய்து அனைத்தின மக்களும் சமமானவர்கள் என்பதை நிலைநிறுத்துவதை இலக்காகக் கொண்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிட்டார்.

அந்த வகையில், புலம்பெயர் தமிழர் அமைப்பு என்பது புலம்பெயர் இலங்கையர் அமைப்பு என்ற அடையாளத்தினையே பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்றுஎம்மிடம்எதிர்பார்ப்பதாகவும், அதனைஒருமுக்கியகோரிக்கையாக முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

புலம்பெயர் இலங்கையர் என்றோ அல்லதுஉள்நாட்டில்இலங்கையர்கள் என்ற அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கோ நாமும் அர்ப்பணிப்புடன்செயற்படுவதோடு, அந்த அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு நீண்ட பயணம் அவசியமாக உள்ளது, அந்தப் பயணத்தின் முதல் கட்டமாகவே இமயமலை பிரகடனம் காணப்படுகிறது என்ற விடயத்தினையும் சுட்டிக் காண்பித்தோம் - என்றார்.

இதனையடுத்து, குறித்த குழுவினர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை அவரது கொழும்பு வாசஸ்தலத்தில் சந்தித்ததோடு அமரபுர நிக்காயவைச் சேர்ந்த வல்பொல விமலஞான தேரர், மாகல்லே நாகித மகா தேரர் பேராசிரியர் கந்தேகொட விமலதம்மே மகாதேரர், வாஸ்கடுவ மஹிந்த வம்ச மகா தேரர், பள்ளிகந்தே இரத்தினசார மகா தேரர், நிந்தனே சந்தவிமல மகா தேரர் ஆகியோரையும் சந்தித்தனர்.

இதில், கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடனான சந்திப்பின்போது, போர் உக்கிரமடைந்த காலத்தில்தான் போரை நிறுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டதாகவும், அதேபோன்ற மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஊடாகப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார் எனவும், இருப்பினும் அந்த முயற்சிகள் அனைத்தும்தோற்றுப்போனதாகவும் கர்தினால் குறிப்பிட்டார் என சுரேன் சுரேந்திரன் தெரிவித்தார்.

அதேநேரம், கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு ஆதரவான தீர்மானங்கள், செயற்பாடுகளை ஏன் எடுத்திருந்தீர்கள் என்று கேள்வி எழுப்பியபோது, அவ்வாறான அணுகுமுறையின் ஊடாக இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் உட்பட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வினை எட்ட முடியும் என்று கருதியதாகப் பதிலளித்தார் என்றும் தெரிவித்தார்.

தற்போதுஎம்மால்கையளிக்கப்பட்ட இமயமலை பிரகடனத்தினை அமுலாக்குவதற்கு பொருத்தமான சூழல்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், அதற்காக தான் ஆயர் பேரவையின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார் எனவும் உறுதியளித்தார்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் மூன்றாவது கரமொன்று உள்ள நிலையில்அந்தச்சம்பவம்தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் அனைத்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நீதி கிடைப்பதற்குத் தான் முழுமையான ஆதரவினை வழங்குவார் என்றும் கூறியுள்ளார்.

இதனையடுத்து அமரபுர நிக்காயவின் தேரர்களை கொட்டாஞ்சேனை திபதுதேமராமய தாய் விகாரையில் சந்தித்த உலகத் தமிழர் பேரவை தலைமையிலான குழுவினர், அங்கு பிரித் வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

இதன்போது, நாட்டில் பிரிவினைவாத சிந்தனையை தோற்றுவித்து குழப்பங்களையும் பதற்றங்களையும் தோற்றுவிப்பது இலகுவானது. ஆனால் ஐக்கிய இலங்கைக்குள் இணைந்து வாழ்வதற்காக தீர்மானித்து முன்வருவது கடினமானதொரு பணியாகும். அந்தக் கடினமான பணியை உலகத் தமிழர் பேரவை முன்னெடுத்துள்ளமையை வரவேற்பதோடு, அந்த சிந்தனை மாற்றத்தின் மூலம் தற்போது ஏற்பட்டுள்ள சூழலை நன்மைகளை அளிக்கும் முகமாக பயன்படுத்த வேண்டும் என்று தேரர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர் என்ற சுரேன் சுரேந்திரன் மேலும் தெரிவித்தார்.

## 108 வருட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யீடுகளும் இன்றி தூக்கிலிடப்பட்டார்.

உயிரிழந்த எட்வெட் ஹென்றி பேதிரிஸின் சடலம், இராணுவச் சட்டத்தின் கீழ் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரின் இறுதிக் கிரியைகளுக்கான நடபடிமுறைகளுக்கமைய, வெளிப்படுத்தாத வளாகமொன்றில் தகனம் செய்யப்பட்டது. அவருடைய கொலை அப்போதுஎமதுநாட்டைஆட்சிசெய்த உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் விளைவு என பின்னர் கண்டறியப்பட்டது.

அதற்கமைய குறித்தபடுகொலை தொடர்பான உண்மையான தகவல்களைக் கண்டறிந்து அவருக்கு நீதி வழங்குவதற்காக குறித்த விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்குபரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக ஓய்வுநிலை உயர் நீதிமன்றநீதியரசர் அனில்குணரத்ன தலைமையிலான மூவர் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பூநகரி குள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேமிப்பு அமைப்புடனான 700 மெகாவோட் சூரிய மின்சக்தி திட்டத்தில் முதலீடு செய்வதற்காக அவுஸ்திரேலியாவின் யுனைடெட் சோலார் குழுமத்துடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

ஆயிரத்து 727 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் இந்த சூரிய மின்சக்தி திட்டம் நிறுவப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## சீனிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலையை மீறி விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. சீனி தனியார் இறக்குமதியாளர்களிடம் இருப்பதாகவும் செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனியைப்பதுக்கிவைத்திருந்தால் நுகர்வோர் அதிகார சபை ஊடாக அவற்றை வெளிக்கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மின் சக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரும்பதவிவிலகவேண்டும். அதேவேளை, மேலும் சில சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளனர்.

## கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகளுக்கான பால்மா போன்ற 43 பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைதீர்மானங்களை அறிவிக்கும்வாராந்தசெய்தியாளர்கள் சந்திப்பு நேற்று நடந்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட முடியாததன் காரணமாகவே சர்வதேசநாணயநிதியத்திடமிருந்து இரண்டாம்கட்டக்கடன்தொகையைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் வரிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய 15 சதவீதமாகக் காணப்பட்ட வற் வரி 3 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாரம், இரசாயன உரம், மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற 43 பொருட்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. வற் வரி தொடர்பில் போலியான தகவல்கள் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பரப்பப்படுகின்றன.

வரவு மற்றும் செலவுக்கு இடையிலான இடைவெளியை குறைக்கும் வகையிலேயே இம்முறை வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால், ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. யார் ஆட்சியைப்பொறுப்பேற்றாலும் இரு வாரங்களுக்கு மேல் அவர்களால் ஆட்சியைக் கொண்டு செல்லவும் முடியாது.

இந்தியா, சீனா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் என்பவை எமக்கு கடன் சலுகைகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. கடன் மறுசீரமைப்புக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களில் வற் வரியை குறைக்க முடியும். அதற்கமைய முடிந்தளவு மக்களுக்கான சலுகைகளை வழங்க முடியும் என்று ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார் என்றார்.

## நடுத்தர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடவில்லை.

ஊழல் மோசடியை இல்லாதொழித்து அரச வீண் செலவுகளை மட்டுப்படுத்துமாறு குறிப்பிட்டது. ஆனால் இந்த யோசனைகள் செயற்படுத்தப்படவில்லை. அரசின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு திங்கட்கிழமை (11) பெறுமதி சேர் (வற்) வரி சட்டமூல விவாதத்தில் எமக்கு உரையாட வாய்ப்பளிக்கவில்லை.

வசதி படைத்தவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 904 பில்லியன் வரி வருமானத்தைபெற்றுக்கொள்வதற்கு தேசிய இறைவரித் திணைக்களம் முறையாகச் செயற்படவில்லை.

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வரி கொள்கையை தவிர்த்து நடைமுறையில் உள்ள வரி கொள்கை வலையமைப்பை சிறந்த முறையில் முறையாக செயற்படுத்தினாலேயே தேசிய வரி வருமானத்தை முறையாக பெற்றுக்கொள்ளலாம்.

வரிகளை அதிகரித்தால் மாத்திரம் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியாது. பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என்பதை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ச, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான கப்ரால், லக்ஷ்மன் மற்றும் ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர உள்ளிட்ட பலர் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக்கூறவேண்டும் என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் வெளிநாட்டு முதலீடுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேசியத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள் என்றார்.

## யாழ்ப்பாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குப் பகுதியைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஆறுகள் மற்றும் நீரோடைகளை அதிகபட்சமாகப் பயன்படுத்த முடிந்தது என்றும் அவர் கூறினார்.

# பொலிஸ் பதிவு நடவடிக்கைகளை கொழும்பில் நிறுத்த முடியாதாம்

## அமைச்சர் டிரான் அலஸ் திட்டவட்டம்

கொழும்பு வாழ் தமிழ் மக்களை இலக்கு வைத்து பொலிஸாரால் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன எனவும் குறித்த விண்ணப்பபடிவங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் வழங்கப்படுகின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சபையில் குற்றம்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுக்கும் வகையில் அனைத்து தரப்பினரிடமும் இவ்வாறான பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

இவ்விடயம்தொடர்பாகஅமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தமிழ் மக்களின்வீடுகளில்மாத்திரம்இவ்வாறு நடப்பதாகப் பொய் கூறுகின்றார்.

கடந்த முறை இவ்வாறன குற்றச்சாட்டைமுன்வைத்தபோது



தனிப்பட்டரீதியில்நான் அவருக்கு அனைத்து விடயங்களையும் தெளிவுப்படுத்தினேன்.

கொழும்பில் 90 வீத மக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. அதில் சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் என அனைவரும் இருக்கின்றார்கள்.

இன்றைக்குநேற்றோஅல்லது நான் வந்த பிறகோ இந்தப் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. வருடக்கணக்கான இவ்வாறு பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வேறு மாவட்டத்தில் வசிக்கும் ஒருவர் தவறு செய்துவிட்டு கொழும்பிற்குவந்துவீடொன்றில் மறைந்திருந்திருக்கலாம்அல்லது கொழும்பில் இருந்து வேறு மாவட்டத்திற்குச் சென்றிருக்கலாம்.

இவ்வாறு நபர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதை அறிந்துக்கொள்வதற்காகவே நாங்கள் இந்தப் பதிவு நடவடிக்கையை முன்னெடுக்கின்றோம். அதில் எவ்வித தவறும் இல்லை. நாங்கள் மதம் குறித்துக் கேட்பதில்லை. இனம் குறித்து மட்டுமே கேட்கிறோம்.

இவருக்குத்தேவையென்றால் அனைத்து ஆவணங்களையும் கொண்டு வந்து கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்போம்.

இந்த பதிவுநடவடிக்கைகளை எம்மால் நிறுத்த முடியாது.

சிங்களமொழியில்மாத்திரமே விண்ணப்பங்கள் இருப்பதாகக் கூறினால் அது குறித்து தேடிப் பார்த்து திருத்தங்களை மேற்கொள்கின்றேன். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்

## அமைச்சர் பியல் நிஷாந்த உத்தரவாதம்

இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை நேரடியாக இந்திய தூதுவருக்குத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிரந்த குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் கேள்வியெழுப்பியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து எனக்கு பொறுப்பு தந்துள்ளார்.

இந்நிலையில், உங்களையும் இணைத்துக்கொண்டு இந்திய உயர்ஸ்தானிகரை சந்துத்துக் கலந்தரையாடுவதற்கும், அதேநேரம், வெளிவிவகார அமைச்சுடன் கலந்துரையாடுவதற்கும் நாங்கள் தினம்ஒன்றைத்தீர்மானித்திருந்தோம்.

ஆனால்,இந்தியஉயர்ஸ்தானிகரின்



மாற்றம் காரணமாக, அந்த திகதியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி ஏற்பட்டது.

எங்களுடைய மீனவர்களுக்கு இருக்கின்றபிரச்சினைகள்ளங்களுக்குத் தெரியும். அந்தப் பிரச்சினைகளுக்கு உங்களுடன் இணைந்து சென்று தீர்வு காணுவது குறித்து நாங்கள் கலந்துரையாடியுள்ளோம்.

ஏனென்றால், இந்த விடயத்தைப் பயன்படுத்தி சிலர் அரசியல் இலாபம் காண முயல்கின்றனர்.

ஆனால், அதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கொள்ளைச் சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழில் கொள்ளைச்சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுவருகின்றன என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் வீதிகளில் பயணிப்பவர்களைக் குறிவைத்தும், இருள் சூழ்ந்து காணப்படும் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களைக் குறிவைத்தும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இரவு வேளைகளில் வீதியில் கூடும் விமிகள் குழுவினர் மது அருந்திவிட்டு வீதியில் செல்வோர் மீது மோதலில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்களும், வர்த்தகர்களும் மிகுந்த அச்சத்துடன் தமதுஅன்றாடவாழ்க்கையைக்கழித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் மற்றும் யாழ்.மாநகர சபை கவனம் செலுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஜனாதிபதி ரணில் நடவடிக்கை

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்காகஅடுத்த ஆண்டுக்கானவரவு-செலவுத் திட்டத்தில்1.5 பில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதனூடாக இலங்கையில் முதன்முறையாக ஏ.ஐ தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பணியை ஆரம்பி த்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



அலரிமாளிகையில்இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்காக அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து துறைசார் குழுவினருடன் கலந்துரையாடியிருந்தேன். இலங்கையில் முதன்முறையாக ஏஜ தொழில்நுட்பத்தைமேம்படுத்தும்பணியை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மேலும் 08 பில்லியன்ரூபாஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தளவு நிதி ஒதுக்கப்பட்டதில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்குவதேஎங்கள்நோக்கம்.

முதலாவதாக, இந்த அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகஒதுக்கப்பட்ட 08 பில்லியன் தொகையை செலவழிக்க தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கவுன்சில் என்ற பெயரில் ஒரு நிறுவனம் நிறுவப்படும்.

நாடாளுமன்றத்தில் தேவையான சட்டங்களை நிறைவேற்றிய பிறகு, புதிய அறிவியல்பொருளாதாரத்தையும் பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்கத் தேவையான நிறுவன ரீதியான கட்டமைப்பு உருவாக்கப்படும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வெளிநாட்டுப் படகு ஒன்று யாழில் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு பொற்பதி பகுதியில் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகு கரை தட்டுவதை கண்ட பிரதேச மீனவர்கள், பருத்தித்துறை பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்புக்களுக்கு அறிவித்ததுடன் குறித்த படகை கரையேற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைபருத்தித்துறைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குறித்த படகு மாதிரி இலங்கையில் பயன்படுத்துவது போன்று இல்லை என்றும் இது இந்திய படகாக இருக்கலாம் எனவும் பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (05)

# குளங்களின் தண்ணீர்மட்டம் கிளிநொச்சியில் அதிகரிப்பு

தற்பொழுது நிலவும் கடும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் குளங்களில் ஒன்றான கல்மடுகுளம் தனது நீர்மட்டமான 26 அடைவு மட்டத்தை விட 27.1 அடியாக உயர்ந்துள்ளது.

அத்துடன், தற்பொழுது குறித்த குளத்தின் மேலதிக 83 வரை வான்பாய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இக்குளத்தின் நிலைகளுக்கு அருகில் வசிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அறிவுறுத்துகின்றனர். (05)

# வவுனியா பிரதேச செயலகத்துக்கு எதிராக கலைஞர்கள் குற்றச்சாட்டு

2023 ஆம் ஆண்டுக்கான வவுனியா பிரதேசசெயலகத்தால் வழங்கப்படும் 'கலாநேத்திரா விருதின்' தெரிவுகள் துறை சார்ந்த நிபுணர்கள் இன்றி இடம்பெற்றுள்ளன எனக் கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த விருதானது நாடக எழுத்துரு, கீழைத்தேச இசை, மேலைத்தேய இசை, பரதம், குறும்படம், ஊடகம், மரபு இசை உட்பட 18 துறைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும், ஐந்து பேர் கொண்ட துறை சார்ந்த நிபுணர்களால் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்எனவும், வவுனியா பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் வெற்றியாளர்கள் அவ்வாறு தெரிவுசெய்யப்படவில்லை எனவும், இதனால் பல திறமையான கலைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வும் கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (05)

# கஞ்சாவுடன் இருவர் கைது

லுனுகம்வெஹர,ஹம்பேகமுவபிரதேசங்களில் கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் லுனுகம்வெஹர, ஹம்பேகமுவ பிரதேசங்களை சேர்ந்த 45 மற்றும் 50 வயதுடையவர்களாவர்.

லுனுகம்வெஹர , ஹம்பேகமுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் லுனுகம்வெஹர பிரதேசத்தில் வைத்து ஒரு கிராம் 300 மில்லிகிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருள் மற்றும் ஹம்பேகமுவ பிரதேசத்தில் வைத்து 8 கிராம் 875 மில்லிகிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தாயும் மகனும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்ப்பு

## எல்பிட்டியில் சம்பவம்

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அநுருத்தகம பகுதியில் வைத்து தாய் மற்றும் அவரது மகன் மீது நபர் ஒருவர் திங்கட்கிழமை காலை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இத்தாக்குதலில் 55 வயதுடைய பெண்ணும் அவரது 25 வயது மகனும் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் எல்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அயலவர்களுடன் ஏற்பட்ட தகராறுகாரணமாக இந்தத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

எல்பிட்டியபொலிஸ்நிலையத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு தொடர்பான முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அழைக்கப்பட்ட பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (05)

# திருட்டுகளுடன் தொடர்புடைய மூவர் பண்டாரகமவில் கைது

பண்டாரகம பகுதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் திருட்டுசம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவர் பண்டாரகம பொலிஸாரால் கைதாகினர்.

பண்டாரகம, ராஜாகம பிரதேசத்தில் பண்டாரகம பொலிஸ் குற்றப் பிரிவின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதாகினர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பண்டாரகமபிரதேசத்தைச்சேர்ந்தவர்கள் என்பதுடன் 30 மற்றும் 38 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 5,320 மில்லிகிராம் போதைப்பொருள், பித்தளையால் செய்யப்பட்ட இரண்டுவளையல் மற்றும் சிலைகள், தங்கநகைகள், புல்வெட்டும் இயந்திரம், கல்வெட்டு, போன்றவைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் சந்தேகநபர்கள் பண்டாரகம நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### பெட்ரிஸ் வழக்கும் நடப்பும்

டுனுகே ஹென்றி பெட்ரிஸ் 1888 ஆவணி 1G இலங்கையின் தெற்குப் பகுதியான காலியில் பிறந்தவர். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை மற்றும் மாமாவிற்கு கிராஃபைட் சுரங்கங்கள், தேயிலைத் தோட்டங்கள், ரியல் எஸ்டேட் என்று பெரும் வியாபாரங்கள் இருந்தன.

பெட்ரிஸ் முதலில் படித்தது புறக்கோட்டையில் உள்ள ரோயல் கல்லூரியில் கற்றார். பின்னர் அங்கிருந்து செயின்ட் தோமஸ் கல்லூரியில் சேர்ந்தார், அங்கு விளையாட்டில் சிறந்து விளங்கி, பள்ளியின் முதல் பதினொரு பேர் கிரிக்கெட் அணிக்காக விளையாடினார். நல்ல துடுப்பாட்ட வீரராக பிரகாசித்தார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் ரோயல் கல்லூரிக்குத் திரும்பினார், அங்கு அவர் மீண்டும் கிரிக்கெட் விளையாடினார்.

பெட்ரிஸுக்கு ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. குறிப்பாக மதுப் பழக்கம் கிடையாது. குடும்பத் தொழிலில் சேர்ந்து, பெட்ரிஸ் தனது வணிக நிறுவனங்களை எடுத்துக் கொண்டு வணிகத் துறையில் ஒரு தலைவராவார் என்று அவரது தந்தை நம்பினார். ஆனால் பெட்றிஸோ இராணுவத்தில் சேர்ந்தார்.

முதலாம் உலகப் போர் நடந்தபோது பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையிலும் தமது படைகளைக் கட்டியெழுப்பத் தொடங்கினர். இலங்கைப் பாதுகாப்புப் படை என்ற பெயரில் அது கட்டமைக்கப்பட்டது. கொழும்பு நகரப் பாதுகாவலர்கள் என்ற பெயரில் ஒரு ஆயுதப் படைப் பிரிவும் உருவாக்கப்பட்டது. குதிரையோட்டத்தில் சிறந்தவரான பெட்ரிஸ் கொழும்பு நகரப் பாதுகாவலர்கள் படையில் சிறந்து விளங்கிய காரணத்தால் விரைவிலேயே அதிகாரி மட்டத்திற்கு உயர்ந்தார். கப்டன் பதவியையும் பெற்றார்.

1915இல் சிங்கள – முஸ்லிம் கலவரம் வெடித்தது. இது கண்டியில் தொடங்கியது. பின்னர் கொழும்புக்கும் ஊடுருவியது. கொழும்பில் அதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பெட்ரிஸினுடையதாக இருந்தது. பெட்ரிஸும் அதனைத் திறம்படவே கையாண்டு வன்முறைக் கும்பல்களுடன் பேசியே நிலமையைக் கட்டுக்குள் வைத்திருந்தார். இது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் அவர்களது இலங்கை முகவர்களுக்கும் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் பெட்ரிஸ் மீது முஸ்லிம்களைக் கொன்று சிங்கள வன்முறைக் கும்பல்கள் கொழும்புக்குள் நுழைய அனுமதித்தார் என்று குற்றஞ்சாட்டி இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தி தூக்கில் போட்டார்கள்.

ஆனால், அந்த விசாரணை சோடிக்கப்பட்டவை என்று சிங்கள மக்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். கொழும்பு கனத்தை மயானத்தில் பெட்ரிஸுக்கு நினைவுச் சின்னமும் வைக்கப்பட்டுள்ளது.

இந்த பெட்ரிஸ்ஸின் வழக்கைத்தான் இப்போது, 108 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். அதாவது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குத் தீவிரவாதியாகத் தெரிந்த ஒரு சிங்களவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாம் தேடமுற்ட்டுள்ளார் ரணில். அதுவும் விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கெடுத்தவர்களை ரணிலின் பயங்கரவாதப் படையினர் தேடித் தேடி வேட்டையாடி வரும் பின்னணியில் பிரிட்டிஷாருக்கு பயங்கரவாதியாகத் தெரிந்த பெட்ரிஸுக்கு நியாயம் தேடுகின்றார் ரணில். எல்லாவற்றுக்கும் காலம்தான் பதில் சொல்லும்.

# அடுத்த தேர்தல் எது?

**உபுல் யோசப் பெர்னான்டோ**

''எந்த தேர்தல் முதலில் வரும்?''

கொழும்பில் இன்றைய அரசியல் கிசுகிசுக்களின் பிரதான தலைப்பு அதுதான்.

''முன்கூட்டியே தேர்தல் வராது...''

இது ஒரு சட்ட நிபுணர் சொன்ன கதை.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டார்.

சட்ட வல்லுனர் தொடர்ந்து கூறும்போது, ''தேர்தல் நடத்த தம்மிடம் பணம் இல்லை என உச்சநீதிமன்றத்தில் அரசு உறுதி அளித்துள்ளது.''

''அப்படியா...?'' என்று பத்திரிகையாளர் கேட்கிறார்.

''ஒரு சிறு வாக்கெடுப்புக்கு பணம் இல்லாததால் அவசரத் தேர்தல் நடத்தப்பட்டால், அது உச்ச நீதிமன்றத்தை தவறாக வழிநடத்துகிறது என்பதாகிவிடும்...'' என்றார் சட்டத்தரணி.

அவர் சொன்னது உண்மைதான். உள்ளாட்சித் தேர்தலை நடத்தப் பணமில்லை என்ற வழக்கு நீதிமன்றத்தில் இன்னும் விசாரணையில் உள்ளது. அவ்வாறான நிலையில் அரசு புதிய தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியான தடை இருக்கிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு பணப் பற்றாக்குறையை வாய் மூடிக்கொண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தலை தேர்தல் ஆணையாளருக்கு அனுமதிப்பதுதான் ஒரே தீர்வு. அப்போது உள்ளாட்சி சபைத் தேர்தலுக்கு பணமில்லை என்றும், அரசமைப்பின்படி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்குப் பணத்தைத் தயார்ப்படுத்த முடியும் என்றும் ஆளும் தரப்பால் கூற முடியும்.

''ஜனாதிபதி தேர்தல் நடக்கும் வரை வேறு எந்தத் தேர்தலும் நடக்காது என்று அர்த்தமா...?''

முன்கூட்டியே அழைக்கக்கூடிய பொதுத் தேர்தல் நடத்தப்படலாம். ஜனாதிபதி எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். அதனால் பொதுத் தேர்தலை நடத்த வாய்ப்பு ஏற்படும். ஆனால் அவசர ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல ரணிலுக்கு அதிகாரம் இல்லை. அதற்கான சட்டங்கள் இயற்றப்படவேண்டும். ரணில் ஜனாதிபதியான நாள் முதல் ரணிலுக்கு விசுவாசமான ஊடகங்கள் இந்த செப்டம்பரில் அவர் அவசர ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போகிறார் என்று கூறிவந்தன.

அந்தக் காலத்தில் ஊடகங்கள் விதைத்த செய்தி இது. ஆனால் இப்போது அதுபற்றி எந்தப் பேச்சும் இல்லை. அப்போது ரணிலுக்கு உடனடி ஜனாதிபதித் தேர்தல்தான் சிறந்தது என்று கூறப்பட்டது.

ரணிலின் பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசியல் அலசல் எழுதுபவர்கள், ரணிலுக்கு உடனடி ஜனாதிபதித் தேர்தலே சிறந்தது என்று எழுதினார்கள். இப்போது ரணிலுக்கு பொதுத் தேர்தல்தான் சிறந்தது என்று கூறப்படுகிறது. அப்படிப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு அவர்கள் பெரும்பான்மையை இழந்தால், ரணில் எந்தப் பிரதமரை வேண்டுமானாலும் நியமித்து, எப்படி ஆட்சியை அமைப்பது என்று அலசுவார்.

அப்படி ஓர் அவசரப் பொதுத் தேர்தல் நடந்தால் இலங்கையின் ஜனாதிபதி ஒரு கட்சியிலும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை மற்றொரு கட்சியும் வெல்வதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கின்றன. ஏற்கனவே அப்படி நடந்த இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன. முதலாவது 1994 பொதுத் தேர்தல். ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் விஜேதுங்க இருந்தார். சந்திரிகாவின் பொதுஜன முன்னணி 105 ஆசனங்களை கைப்பற்றியது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றது. விஜேதுங்கவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சந்திரிகாவை பிரதமராக்கிவிட்டு வீட்டுக்குப் போனார்.

அடுத்து 2001 பொதுத் தேர்தல். அந்தத் தேர்தலில் ரணிலின் ஐ.தே.க. வென்றது. சந்திரிக்கா ரணிலைப் பிரதமராக்கி அனைத்து அமைச்சுக்களையும் கொடுத்தார். ஆனால், பின்னர் அந்த ஆட்சியைக் கலைத்தார்.

1994க்கும் 2001க்கும் இடையிலான தெளிவான வித்தியாசம் என்னவென்றால், 1994ல் விஜேதுங்கவின் ஜனாதிபதி பதவிக்காலம் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் முடிவடைய இருந்த நிலையில் பொதுத் தேர்தலை நடத்தினார். 2001இல் சந்திரிகாவிற்கு இன்னும் 4 வருடங்கள் எஞ்சியிருந்தன. 1994இல் விஜேதுங்க இருந்த இடத்தில் இன்று ரணில் இருக்கிறார். விஜேதுங்கவிற்கு இருந்த நாடாளுமன்ற ஆணைகூட ரணிலுக்கு இல்லை.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஜே.வி.பியோ வெற்றி பெற்றால் அடுத்த நாளே ரணிலுக்கு வீட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை. ரணில் தங்கினால், பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியானதும் இரண்டாவது போராட்டம் தொடங்கும். அறகலய போராட்டத்தின் எதிரிகளான ராஜபக்ச குடும்பத்தினர் மற்றும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களால்தான் ரணில் ஜனாதிபதியானார் என்பதால் அவருக்கு மக்கள் எதிர்ப்பு கட்டாயமாக இருக்கும்.

ரணில் ஜனாதிபதியானவுடன் போராட்டத்தை அடக்கி ராஜபக்சக்களைப் பாதுகாத்தார். அதற்காகப் போராட்டம் ஓய்ந்துவிட்டது என்று அர்த்தமில்லை. இரும்புக் காலணி போராட்டத்தை அடக்குகிறது. இந்த ஷூவை சுத்தியலால் நசுக்கிவிட்டு, தேர்தல் முடிவுகள் வரும்போது மக்கள் காலி முகத்திடலுக்கு மீண்டும் திரும்புகிறார்கள். ரணிலை விரட்டுவார்கள். கடந்த வருடமும் இதேபோன்று தேர்தல் முடிவுகள் வெளியாகும்போது மக்கள் காலி முகத்திடலுக்கு மக்கள் மீண்டும் வரக்கூடிய வாய்ப்புகள் இருந்ததாலேயே உள்ளாட்சி சபைத் தேர்தலை நடத்த அரசு அஞ்சியது.

பிரேமதாசவின் கீழ் ஐ.தே.கவை பிரதமராகக் கொண்டு, கண்டியில் இருந்து அதிக வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவான விஜேதுங்க, 105 ஆசனங்களைப் பெற்ற சந்திரிக்காவுக்குப் பயந்தார் என்றால், நாடாளுமன்ற ஆணைக்கூட இல்லாத ரணிலின் நிலையை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. அவசர பொதுத் தேர்தலை நடத்தி ஒருவேளை அதில் வெற்றிபெறும் கட்சிக்கு பிரதமர் பதவியை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டை ரணில் எடுப்பது குறித்து சிந்திக்கக்கூட முடியாது. அப்படி நடந்தால் மக்கள் கிளர்ச்சியை தடுக்கவே முடியாது.

இது ரணிலுக்கு தெரியும். எனவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவை அனுமதிப்பதும், கடைசி நாள் வரை ஜனாதிபதி பதவியில் நீடிப்பதும்தான் அவருக்கு இப்போது இருக்கும் ஒரே தெரிவாகும். 2001 பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், ஜனாதிபதியாகத் தொடர்வதற்குச் சந்திரிகாவுக்கு மேலும் 4 வருடங்கள் இருந்தன, ஆனால் அவர் ஐ.தே.கட்சிக்குக் கிடைத்த மக்கள் ஆணையைக் கண்டு அஞ்சினார். அதைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தின் மூலம் ரணிலால் சந்திரிக்காவைப் பதவியில் இருந்து அகற்றியிருக்க முடியும். ஆனால் அவர் அப்படி அந்தப் பிரச்சினையை முடிக்க விரும்பவில்லை. பதிலாக அவருக்குப் பிணக்குகளைத் தொடரும் அரசியலிலேயே நம்பிக்கை இருந்தது.

இப்போது நிலமை அப்படியல்ல, மக்கள் வெடிக்கத் தயாராக இருக்கும் எரிமலை போல் இருக்கின்றார்கள். அந்த வெடிக்கத் தயார் நிலையில் இருக்கும் எரிமலையின் மேலேயே ரணில் ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார். அவர் அந்த உச்சியை ஆக்கிரமித்துள்ளார். எரிமலை எப்போது வெடிக்கும் என்று சொல்ல முடியாது. அது எப்போது வெடிக்கும் என்பதும் வாக்கு கேட்கும் நேரம் எது என்பதும் ரணிலுக்கு நன்றாகவே தெரியும்.

இலங்கையின் பொதுத் தேர்தல் வரலாற்றில் ஆட்சியில் இருந்த ஆளும் தரப்பைவிட அதிக ஆசனங்களைப் பெற்ற எதிர்க் கட்சிக்குப் பிரதமர் பதவியை வழங்காமல் சிறிமாவோ பண்டாரநாயக்கா சங்கடப்பட்டார். 1965 பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் டட்லியின் ஐக்கிய தேசியக் கட்சி 66 இடங்களில் வெற்றி பெற்றது. தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 41 ஆசனங்களைக் கைப்பற்றியது. இருப்பினும் டட்லியின் ஐதேக பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சி அமைக்கத் தவறிவிட்டது. இதனால் சிறிமா பிரதமர் பதவியை ராஜினாமா செய்யவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி மக்களை வீதிக்குக் கொண்டு வந்தது. பயந்து போன சிறிமா ஒரு வழியாகப் பதவிக் கதிரையிலிருந்து கிளம்பினார்.

ஒ-ருவேளை, அவசர அவசரமாகப் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு பிறகு தேர்தல் நடத்தப்படும். பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு புதிய ஆட்சி அமையும் போது ரணிலுக்கு மூன்று அல்லது நான்கு மாதங்கள் மட்டுமே பதவியில் எஞ்சி இருக்கும்.

அதாவது, தனது பதவியை விட்டு வெளியேறி வீட்டிற்குச் செல்வதற்கு ஜனாதிபதி தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளும் காலமாக அது கருதப்படும். ஒருவேளை, பொதுத் தேர்தலில் வெற்றிபெறும் கட்சியின் பிரதமர், மக்களாணை பெற்ற தன்னை பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து ஜனாதிபதியாக்க விரும்புவதால் ரணிலை அந்த மூன்று மாதங்களுக்குள்ளேயே பதவியிலிருந்து விலகிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கலாம். அதற்கு ரணிலிடம் பதிலே இருக்காது.

அதாவது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பறிபோனால் தனது ஜனாதிபதிப் பதவியும் பறிபோய்விடும் என்பது ரணிலுக்குத் தெரியும். அதனால் நாடாளுமன்றப் பெரும்பான்மையைத் தக்க வைப்பதற்கு ரணில் தனக்குத் தெரிந்த அனைத்து ஆட்டங்களையும் ஆடுவார்.

காலைக்கதிர் Kalaikkathir

# விபசார விடுதியாக மசாஜ் நிலையம் இரு பெண்கள் உட்பட மூவர் கைது

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதியை நடத்திய குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட மூவர் திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 57 வயதுடைய ஆணும் கிளிநொச்சி மற்றும் ரத்தொட பிரதேசங்களை சேர்ந்த 30, 57 வயதுடைய இரண்டு பெண்களுமாவர். கல்கிஸை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பல இடங்களில் வீடு, கடைகளை உடைத்துத் திருடிய நபர் கைது

கஹாதொடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஹாதொடுவ, மொரகஹாஹேன பிரதேசங்களில் வீடுகள் மற்றும் கடைகளை உடைத்து திருடியதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கஹாதொடுவ பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடையவராவார்.

விசாரணையில் திருடிய பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹாதொடுவ பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)

# பொலன்னறுவையில் இடம்பெற்ற விபத்தில் மாணவன் உயிரிழப்பு

பொலன்னறுவை, சுங்காவில பிரதான வீதியின் 16 ஆம் இலக்க கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்வதற்காக முற்பட்ட சந்தர்ப்பத்தில் வேகக்கட்டுப்பாட்டையிழந்து எதிர் திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது காயமடைந்த இரு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்த மேலும் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய 17 வயதுடைய பாடசாலை மாணவர் உயி ரிழந்துள்ளார். (05)

# கராப்பிட்டியவில் மண்மேடு சரிந்து வீழ்ந்து காயமடைந்த மற்றையவரும் உயிரிழந்தார்

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அருகில் உள்ள கட்டுமான பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்து புதையுண்ட நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் மேலும் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (05)

# தேர்தல் மூலம் தனது இருப்பை பாதுகாக்க ஜனாதிபதி முயற்சி

## சிறிதரன் சுட்டிக்காட்டு



தேர்தல் தொடர்பான விடயங்களில் தனது இருப்பைப் பாதுகாக்கவே ஜனாதிபதி விரும்புகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடியதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஜனாதிபதிக்கு தேர்தல் வருத்தம் இருக்கின்றது. ஆனால் தேர்தல் நடக்காது. தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது.

அவர் இவ்வாறு கூறி தனது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளப் பார்க்கின்றார்.

ஆனால் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் அரசமைப்பின் பிரகாரம் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

அதை நடத்தினால் தான் அவர் ஏனைய தேர் தல்களைப் பற்றி சிந்திக்க முடியும்.

ஆனால் அவர் தேர்தலை நடத்தப் பயப்படும் நிலைமை காணப்படுகிறது. தேர்தலை என்றாலே விசர் நாய் தண்ணீரை கண்டது போல் பயப்படுகின்றார். ஆகவே அவர் தேர்தலை நடத்தவே மாட்டார்.

எதிர்வரும் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தேர்தல் ஒன்றை நடத்தியாக வேண்டும். அதன்பின் யார் ஜனாதிபதியாக வருகின்றார்களோ அவர் தேர்தலை பற்றி யோசிப்பார்.

ஆகவே இலங்கையில் தற்போதைக்கு வேறு தேர்தல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை.

ஏதேனும் அதிசயங்கள் அல்லது அழுத்தங்கள் இடம்பெற்றால் மாத்திரமே தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ராகமை அடகு கடையொன்றில் கொள்ளையிட்ட ஐவர் கைது

ராகமை நகரிலுள்ள நகை அடகு கடையொன்றில் கொள்ளையிடப்பட்ட நகைகள் மற்றும் பணத்துடன் ஐந்து சந்தேக நபர்களை ராகமை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்களில் அடகு கடை உரிமையாளரின் தாயும், காசாளரும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அடகு கடையில் கொள்ளையிடப்பட்ட 14 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளும், ஆறு லட்சத்து இருபத்தி ஒன்பதாயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த கொள்ளைச் சம்பவம் உரிமையாளரின் தாய் மற்றும் அடகு கடையின் காசாளர் ஆகியோருக்கு தெரிந்தே இடம்பெற்றுள்ளதுடன் சிசிடிவி காட்சிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்


பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 3டி மாடலிங் ரோபோட்டிக்ஸ் ஆய்வகம்






தென்கிழக்குப் பல்கலைக் கழக தொழில்நுட்ப பீடத்தில் 3டி மாடலிங் மற்றும் ரோபோட்டிக் ஆய்வகம் அமைக்கப்பட வுள்ளது. இதற்கான அதிநவீன 3டி பிரிண்டர், ரோபோடிக் கை உட்படபலரோபோடிக்உபகரணங் களை துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனம் அண்மையில் வழங்கிவைத்துள்ளது.

குறித்தகையளிப்புநிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், தொழில்நுட்பபீடபீடாதிபதிகலாநிதி யூ.எல். மஜீத், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைதலைவர் ஆர். கே. றிபாய் காரியப்பர், ரிஜஓஎ இன் பிரதி நிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ரிஜஓஎ பிரதி நிதிகள் 'தென்கிழக்குப்பல்கலைக்கழகத் திற்கும் ரிஜஓஎ நிறுவனத் திற்கும் இடையேயான இந்த கூட்டு முயற்சி, இலங்கையில் அறிவியல்மற்றும்தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய திருப்புமுனை யாகும். இந்த உபகரணங்கள் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் பணி யாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குவதோடு புதுமையான தீர்வுகளை உருவாக்கவும், சவால்களைத் தீர்க்கவும் உதவும்.

இந்தக் கூட்டு முயற்சியின் வெற்றி, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை மேம் படுத்தவும், இலங்கையில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின்எதிர்காலத்தைபிரகாசம ாக்கவும்உதவும்என்பதில்மாற்றுக் கருத்துகள் இல்லை. - இவ்வாறு தெரிவித்துள்ளனர். (05)

# வெள்ளையடிப்பு செய்த உலக தமிழர் பேரவை

## கஜேந்திரகுமார் கடும் குற்றச்சாட்டு



சிங்கள பௌத்த பிக்குகளுடன் இணைந்து பிரகடனமொன்றில் கையொப்பமிட்டதை அடுத்து உலகத் தமிழ் பேரவையுடனான சந்திப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புறக்கணித்துள்ளது.

மாவீரர்நினைவேந்தலின்போது அரசாங்கம் மக்கள் மீது மீண்டும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கட்டவிழ்த்து விட்டதாக அக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

இந்த பின்னணியில், அரசாங்கத்திடம் பிரகடனத்தை கையளித்தமை வெள்ளையடிப்பு செயற்பாடு என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும் இந்த விடயங்கள் தொடர்பாகத் தாயகத்தில் உலகத் தமிழ் பேரவை எவருடனும் கலந்தாலோசிக்கவில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கு பயணம் செய்துள்ள உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களை சந்திக்க நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மறுப்பு தெரிவித்துள்ளார். (05)

# வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

சட்டவிரோதமாக இலங்கைக்குகொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பளை பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடையவராவார்.

இவர் டுபாயிலிருந்து திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய சோதனை நடவடிக்கையில் 22 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 114 சிகரெட்டு பெட்டிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளனர்.

கைது செய்யப் பட்டவர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## விவசாய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

விஞ்ஞானமற்றும்தொழில்நுட்ப அடிப்படை இல்லாமல் எமக்கு முன்னேறிச் செல்ல முடியாது. நாட்டை முன்னேற்ற முடியாது. அதேபோன்று விவசாயம் மற்றும் நவீனப்படுத்தல் தொடர்பில் பேசுவதன் மூலம் கிடைக்கும் பயன்பாடுகளை எவ்வாறு அதிகரித்துக்கொள்வது என்பதே அதன் நோக்கமாகும். அதற்காக நாங்கள் நவீன தொழில்நுட்ப விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

எங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பே இருக்கிறது. அதன் மூலம் நாங்கள் முடியுமான பிரயோசனம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக இருக்கும் ஒரே தீர்வு தொழில்நுட்பத்தை விவசாயத்தில் இணைப்பதாகும். அதனால் நாங்கள் வேளாண் தொழில்நுட்ப முறை தொடர்பில் நாங்கள் ஆராயச்சி நிறுவனம் ஒன்றை நிறுவ இருக்கிறோம். இலங்கையில் விவசாயத்தை நவீனமயமாக்கதனியார் துறைக்கு அழைப்பு விடுத்திருக்கிறோம்.

அதேபோன்று வலுசக்தி தொடர்பில்தெரிவிப்பதாகஇருந்தால், நாங்கள் பல கிகாவோட்களை காற்றாலை மின்சாரத்தின் மூலம் பெற்றுள்ளோம். அதேபோன்று 200 கிகாவோட் சூரிய சக்தி மின்சாரம் மூலம் பெற்றுக்கொள்வோம். நாங்கள் இந்தியாவிடமிருந்து உதவிபெற்றுக்கொண்ட முறையும் இருக்கிறது. கிரீன் ஹைடிஜன் மற்றும் அமோனியா முறையாகும். இதில் ஹைடிஜன் முறையை கடல்சார் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகிறோம். இது போன்ற துறைகளில்வித்தியாசம்இருக்கிறது.

ஜேர்மன் மற்றும் பிரான்ஸுடன் நாங்கள் கிரீன் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடி இருக்கிறோம். மேலும் 4, 5 வருடங்கள் செல்லும்போது அதாவது 2035க்கு பின்னர் வரும் தொழில்நுட்பம் எமது நாட்டை தொழில்நுட்பரீதியில் முன்னேற்றமடைந்த நாடாக அறிமுகமாகும் நிலை ஏற்படும்.

முன்னர் எங்களுக்கு பாறியியல் தொழில்நுட்பம் இருந்தது. கடந்த காலத்தில் எமது பொறியியல் தொழில்நுட்பத்துக்கு எந்தவொரு நாட்டுக்கும் சமமாக முடியாமல் இருந்தது. எகிப்து பிரமிட்களுக்கு சமமாக எமது நாட்டில் சைத்தியம் அமைக்கப்பட்டிருந்தது. தண்ணீரை மேல்மாடிக்கு கொண்டுசெல்ல முடியுமான முறை அமைக்கப்பட்டிருந்தது. சிகிரியாவில் அது இருந்தது. அவர்கள் பட்டம் பெற்றவர்கள் அல்லர்.

எனவே, நாங்கள் புதிய பல்கலைக்கழகங்களை அமைப்போம். இந்தியாவின் உதவியுடன் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கொத்தலாவல பல்கலைக் கழகத்துடன் குருணாகலை மற்றும் சீதாவக ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களையும் இணைப்போம் என்றார்.

## சகல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கினனறது.

தற்போதுநாட்டுக்குதேவையான புளி இறக்குமதி செய்யப்படுகிறது. ஒவ்வொருபிரதேசசெயலகங்களிலும் பொருத்தமான இடங்களில் புளியமரங்களைநாட்டுமாறுபிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அரசசார்பற்றநிறுவனங்களிடமும் உதவியை கோரியுள்ளேன். எதிர்காலத்தில் புளிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும்.

தற்போது புளியமரத்தை நாட்டினால் பத்து பதினைந்து வருடங்களில் புளிக்கு தட்டுப்பாடு இல்லாத நிலை ஏற்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கே உரித்தான பாரம்பரிய பழ மரங்கள் வெட்டப்படுகிறது. மா மரம், பலா மரம் என்பன வெட்டப்படுகிறது. இது தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். பாரம்பரிய பழ மரங்களை பாதுகாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது -என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு எம்.பிக்களுக்கு இந்தியத் தூதுவரை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரத் தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தமிழகத்துடன் பேச்சு நடத்துவதே சிறந்தது. வட மாகாணத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேச முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு தி ட்டத்தில் கடற்றொழில் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்ட-மூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினை நெடுங்காலமாகத் தொடர்கின்றது.

எம்மைப் பொறுத்தவரை நாம் அதற்காக இரண்டு விதமான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றோம். முதலாவது நடவடிக்கை இராஜதந்திர ரீதியில் அதனை முன்னெடுப்பது. அந்த வகையில் ராஜதந்திர ரீதியாகப் பல பேச்சுகள் நடத்தப்பட்டு அவை பயனளிக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இரண்டாவதாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்தல்.

அந்த வகையில் சட்ட ரீதியான நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக ஞா-யிற்றுக்கிழமைமற்றும்இரண்டுதினங்களுக்கு முன்பதாகவும் அத்து மீறி எமது கடற்பரப்பு பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

எமது மீனவர்கள் அதன் போது கடற்படையினரிடம் அது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்கள். அதன் போது கடற்படையினரும்வேண்டாவெறுப்பாகஇந்தி ய மீனவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இத்தகைய கைது செய்திகள் தமிழ்நாட்டில் பரப்பப்படும் போது அது பிரச்சி னைக்குரியதாகின்றது. தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் பாரம்பரியமாக மேற்கொண்டு வரும்தொழில்எனவும்இலங்கைகடற்படையே அவர்களை முறையற்ற விதத்தில் கைது செய்கின்றார்கள் என்றும் அங்குள்ளவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அதற்கிணங்க ஒரு புதிய வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் நான் சிந்தித்துள்ளேன். அந்த வகையில் வடக்கிலுள்ள கடற் தொழிலாளர்கள் ஒரு குழுவாகத் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி அங்குள்ள ஊடகங்களுக்கும் இங்குள்ள உண்மைநிலையைத்தெளிவுபடுத்தமுடியும்.

இந்தியமீனவர்கள்அத்துமீறியேஇலங்கை கடற்பரப்பில் பிரவேசித்து வளங்களை அழிக்கின்றார்கள் என்றும் அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதி க்கப்படுவதாகவும் தெரிவித்து அதன் காரண மாகவே கடற்படையினர் அவர்களைக் கைது செய்வதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி, வட மாகாணத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்தமிழ்நாட்டுக்குச்சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேச முடியும். அத்துடன் அங்குள்ள ஊடகங் களுக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியும்.

இந்தச் செயற்பாட்டிற்கு வடக்கிலுள்ள எம்பிக்கள் சிலர் இணக்கம் தெரிவித்துள் ளார்கள். எனினும் சார்ள்ஸ் எம்.பி. அதற்கு இணக்கம் தெரிவிக்காமல் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரை அழைத்து பேசலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அது ஒரு பிரச்சினை இல்லை. எனினும் அடிக்கடி இந்தியத் தூதுவர்கள் மாற்றமடைந்து செல்வதால் அதில் ஒரு சிக்கல் காணப்படுகிறது.

எனினும் இந்தியத் தூதுவர்களுக்கு இந்த விவகாரம் அத்துப்படி. அவர்கள் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் முழுமையாக அறிந்துள்ளார்கள் என்பதால் அவர்களும் கூட தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல்வாதிகளுடன் பேசலாம். அதன் மூலம் தான் நிரந்தரத் தீர்வு காண முடியும் என்ற யோசனையையே முன் வைப்பார்கள்.

அதற்கிணங்க சார்ள்ஸ் எம்.பி. இதனைப் புரிந்து கொண்டு தமிழ்நாட்டிற்கு சென்று இந்தப் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தி னால் நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என நான் நம்புகின்றேன். - என்றார்.

இதன் போது குறுக்கிட்ட சார்ள்ஸ் நிர்ம லநாதன் எம்.பி., இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர்கள் மாறினாலும் தமிழ் நாடு போன்ற மாநில அரசாங்கத்துடன் நாம் பேச்சு நடத்தாமல் இந்தியா என்ற பாரிய அரசாங்கத்துடன் அது தொடர்பில் பேசினால் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும் என் பதே எமது எதிர்பார்ப்பு. - என்றார்.

அந்த வகையில் முதற்கட்டமாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவருடன் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் புத்தளத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேச்சு நடத்துவதற்கு ஏற் பாடுகளை மேற்கொள்வது சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அதன் போது கருத்து தெரிவித்த அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, யார் யாரெல்லாம் இந்தியத் தூதுவரைச் சந்திக்கப் போகின்றீர்கள் என்ற பட்டியலை என்னிடம் தந்தால் நான் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வேன்.

கடற்தொழில் அமைச்சர் என்ற வகையில் எழுத்து மூலம் எனக்கு நீங்கள் அதற்கான கோரிக்கையை முன் வைத்தால் நான் நிச்சயம் அதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்வேன். பேச்சுக்கான திகதியையும் பெற்றுத்தர முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (05)

# மதுபானசாலை காட்டி சுற்றுலா பயணிகளை கொண்டு வர வேண்டிய தேவை கிடையாது

## வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் காட்டம்



வடக்கு கிழக்கில் சுற்றுலாவை விருத்தி செய்ய வேண்டுமா னால் சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண் டும். மது பானத்தை காட்டி எங்கள் பிரதேசங்களுக்கு சுற்றுலா பயணிகளைக் கொண்டுவர வேண்டிய தேவை இல்லை என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்ச.சுகிர்தன்தெரிவித்தார். யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பகுதி யில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு எதி ராக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே ச.சுகிர்தன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் -

உடுப்பிட்டியில் மக்கள் செறி வுள்ளபகுதியில்சிலமாதங்களுக்கு முன் மதுபான விற்பனை நிலை யம் அமைக்கப்பட்டது.

இதற்கு எதிராக மக்கள் பெரும ளவில் போராட்டம் செய்தபோது பொதுமக்களின் எதிர்ப்பைக் கருத் திற்கொண்டு மதுபான விற்பனை நிலையத்தின் அனுமதி தற்காலிக மாகரத்துசெய்யப்பட்டுமூடப்பட்டது.

ஆனால் தற்போது சில நாள்களாக மதுபான விற்பனை நிலையம் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுகிறது. உடுப்பிட்டி அமெ ரிக்கன் மின் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இமையாணன் இ.த.க. பாடசாலை, நவிண்டில் தாமோதரா பாடசாலை என்பன குறித்த மதுபானசாலைக்கு மிகக் குறைந்த தூரத்திலிருக்கிறது.

இதுதொடர்பாகக் கரவெட்டி பிரதேச செயலாளரை பொது அமைப்புகள் தொடர்பு கொண்ட போது நேரடியாகவும் வாய் மொழி மூலமாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் தனக்கு அறிவுறுத்தியதால் தான் இடத்திற்கான சிபார்சை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதி கள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடி மகஜரைக் கையளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. ஆறு வருடங்களுக்கு முன்னரும் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு பல சமூக சீரழிவுகள் ஏற்பட்டதால் பொது மக்கள் போராட்டம் செய்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட்டது. இரண்டாம் தடவையாகக் கொண்டுவர முயற்சித்தும் அது முடியாத நிலையில் மூன்றாவது தடவை-யாகத் திறக்கப்பட்ட மதுபான நிலையம் பொதுமக்கள் எதிர்ப் பால் மூடப்பட்ட போது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் அதில் தலையிட்டு அதைத் திறந்து வைக்க உத்தரவிட்டார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரது சந்திப்பில் சாதகமான முடிவு கிடைக்குமென பொது அமைப்புகளின் பிரதிநிதி கள் கருதுகின்றனர்.

இது புதிய மதுபானசாலை அல்ல. கடந்த காலங்களில் நெல்லியடியில் இயங்கிய மது பான விற்பனை நிலையமே இங்கு இடமாற்றப்பட்டுள்ளது.

ஆகவே அது பழைய இடத்திலேயே இயங்குவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்த இடத்தில் இருந்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட வேண்டும். இதற்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (05)

# காணாமல்போன மாணவி சடலமாக மீட்கப்பட்டார்

இரத்தினபுரி - கொலன்ன பிரதேசத்தில் காணாமல் போன பாடசாலை மாணவி ஒருவர் கிங் கங்கையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொலன்ன பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவி யாவார்.

இவர் கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி காணாமல் போன நிலையில் பெற்றோர் பொலி-ஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்ட விசாரணையில் மாணவி கிங் கங்கையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொலன்ன பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)

# கொழும்பு தமிழ் மக்களை இலக்கு வைத்து பொலிஸாரின் அநீதி நிறுத்தப்படவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்ட, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி மற்றும் மோதர ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உள்ள தமிழ் மக்களை குறிவைத்து மீண்டு மொரு பதிவு நடவடிக்கை நடந்து வருவதாகவும், இந்த அனைத்து பதிவு விவர பத்திர ஆவணங்களும் சிங்கள மொழியிலேயே வழங்கப்படுகின்றன எனவும், நாட்டின் அரசமைப்பை மீறி சிங்கள மொழியில் மட்டுமே இந்த விவர பதிவுப் பத்திர ஆவணங்களை வழங்குகின்றனர் என்றும், அது தவறான விடயம் என்றும்,'ரணில் பொலிஸ் இராஜ்யமா நடக்கிறது என சந்தேகம் எழுவதாக' நாடாளுமன்ற உறுப்பினர்மனோகணேசன்எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் முக மாக கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இந்நடவடிக்கை தவறானது என்றும்,ஆள்களைப் பதிவு செய்யும் நடைமுறையொன்று உள்ளதாகவும், இந்தப் பதிவு முறை குறித்த நடைமு-றையையே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், இதற்காக பொலிஸ் முறையைப் பயன்படுத்தி அநீதி இழைக்கக் கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் போலவே குற்றங்களைக் குறைப்பதும் முக்கியம்என்றாலும்,ஏதேனும்நியாயம ற்ற முறை நடைமுறைப்படுத்து-வதற்கு இடமளிக்க முடியாது என்றும், எந்தவொரு வேலைத்திட்டத்தி லும் வெளிப்படைத்தன்மையும் ஜனநாயகமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார். (05)

# மலையக மக்கள் குறித்து பேச்சு நடத்த அமெரிக்க சிறப்புப் பிரதிநிதி வருகை

மலையகத் தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்தி சிறுபான்மை ம க்களின் உரிமைகள் பற்றி பேச்சு நடத்த இன சமத்துவம் மற்றும் நீதிக் கான அமெரிக்க சிறப்பு பிரதிநிதி டிசைரி கோர்மியர் ஸ்மித் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவர் திங்கட்கிழமை முதல் 15 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார். டிசைரி கோர்மியர் ஸ்மித் தெற்காசி-யாவிற்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். அவர் கொழும்பு, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மேலும், கோர்மியர் ஸ்மித், ம லையகத் தமிழர்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் அரசாங்க அதி காரிகளை சந்திக்கவுள்ளார்.

நுவரெலியாவில் அமெரிக்கத் தூதரகத்தின் ஆங்கில கல்விக்கான உதவித்தொகைத் திட்டத்தின் தொடக்க நிகழ்வில் கோர்மியர் ஸ்மித் பங்கேற்கவுள்ளார்.

இது, ஓர் அமெரிக்க அரசாங்க நிதியுதவியுடன் கூடிய உலகளாவிய தி ட்டமாகும், இது பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு ஆங்கில மொழித் திறன்களின் அடித்தளத்தை வழங்குகிறது. இந்நிகழ்வில் மூன்று மாத பாடநெறியை வெற்றிகரமாக முடித்த 25 மாணவர்களுக்கு அவர் விருதுகளை வழங்குவார். இந்த முயற்சிமலையகத்தமிழ்ச்சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களை அவர்களின் பொருளாதார வாய்ப்புகளை மேம் படுத்த புதிய தொழிற்தகைமை களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

# ‘யூஸி மாஸ்’ மனக் கணித சர்வதேசப் போட்டியில் திருநெல்வேலி நிலைய மாணவர்கள் சாதிப்பு







*இந்த மாதத் தொடக்கத்தில் மலேசியாவில் இடம்பெற்ற யூஸி மாஸ் சர்வதேசப் போட்டியில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி நிலையத்தின் சார்பில் போட்டியிட்ட 19 மாணவர்களுமே 2ஆம் 3ஆம் இடங்களைப் பெற்றுச் சாதித்துள்ளனர்.*

*சிறுவர்களுக்கான மன வளர்ச்சித் திட்டமான ஜப்பானிய அபாகஸ் முறையிலமைந்த யூஸி மாஸ் கற்கையின் சர்வதேச மனக் கணிதப் போட்டி 2023 டிசெம்பர் 3 மலேசியாவில் உள்ள சொர்டா கென்வென்சன் நகரில் நடந்தது. இதில் இலங்கையில் இருந்து 62 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்களில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி நிலையத்தில் இருந்து மட்டும் 19 பேர் பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் வெற்றி பெற்றுள்ளனர்.*

*அவர்கள் அனைவருமே போட்டியில் 2ஆம் 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர். ’ஏ1’ பிரில் சுதர்சன் அருணன், ’பி’ பிரிவில் வைாலி ரஜீவன், ’டி’ பிரிவில் அஸ்வினி அனோஜன் ஆகியோர் 2ஆம் இடத்தைப் பெற்றனர். ’ஏ1’ பிரிவில் தனதீபன் அக்ஷயன், அஷ்விகா யசோதரன், பவிரா உமைபாலன், அத்விகா சிந்துஜன் ஆகியே-ாரும் ’ஏ2’ பிரிவில் விதுஷிகா மதிவதணன், சாத்வி கோபாலகிருஷ்ணன், சக்ஸ்யாஸ்ரெஜிலதரன், வினோஷ்கா பிரசன்னா, பிரணவன் யதுஷ் ஆகியோரும் ’பி’ பிரிவில் உதயகுமார் ரிஷ்வின், சத்யகி இளங்குமரன் ஆகியோரும் ’டி’ பிரிவில் சயந்தன் தரணிகன், அபிசனா கேசவன், அச்சுதா மதிவதணன், பரமேஸ்வரன் அருணேந்திரன் ஆகியோரும் ’எவ்’ பிரிவில் அபி்ா கோகிலராஜ்ஜும் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர் என்று திருநெல்வேலிக் கிளையின் பொறுப்பதிகாரி ராதை பாஸ்கரன் தெரிவித்தார்.*

*‘பயிற்றுவிப்பாளர்களின்மாதக்கணக்கான அர்ப்பணிப்பும், பல வருட அனுபவமுமே இந்த இளையவர்களின் திறமைகளை இந்த அரங்குக்கு கொண்டு வந்துள்ளது” என்றும் அவர் தெரிவித்தார்.*

*’யாழ்ப்பாணம்திருநெல்வேலிக்கிளையின் 17 வருட சாதனைப் பயணம், புத்தாக்கம் மிக்க மாணவர்களை உருவாக்குவதில் பெரும் வெற்றி கண்டிருப்பதனை தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளின் மூலமாகக் கண்டுகொள்ள முடியும். ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டி வெற்றிகளில் யாழ் /திருநெல்வேலி யுசிமாஸ் கிளை முன்னணி வகிக்கின்றது” என்றும் அவர் தெரிவிக்கிறார்.*

*மலேசியாவில் நடக்கவுள்ள போட்டியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் பங்கேற்றிருந்தனர். யூஸி மாஸ் திருநெல்வேலிக் கிளையானது தனது 17 வருட சாதனைப் பயணத்தில் ராதை பாஸ்கரன் 8ஆவது தடவையாக சர்வதேசப் போட்டிக்குத் தனது மாணவர்களைத் தயார்ப்படுத்தி அழைத்துச் சென்றுள்ளார்.*

## பங்களாதேஷ் பெண்ணிடம் கொள்ளையிட்ட இருவர் கைது

சுற்றுலா பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பங்களாதேஷ் பெண் ஒருவரிடம் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண் நடந்து சென்றுகொண்டு இருக்கையில்சந்தேகநபர்களானஇருவரும் தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பிச்சென்றுள்ளனர். பின்னர் இவர்கள் கொழும்பு செட்டித்தெருவிலுள்ள நகை கடை ஒன்றில் குறித்த நகையை விற்பனை செய்து 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் இருவரும் அதிக போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)

## வீதியில் சென்ற பெண்ணை தாக்கி யாழில் தங்க நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில்தனிமையில்சென்றபெண்ணைத் தாக்கிஅவரிடம்இருந்துதங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இவ்வாறு கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலி நாவற்காடு வீதியில் உள்ள பாடசாலையொன்றுக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஒரு பவுண் காப்பும் அரைப் பவுண் மோதிரமும் கொள்ளையடித்துச்செல்லப்பட்டனஎன அச்சுவேலிபொலிஸார்தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

## நகை அடகுக் கடையில் கம்பஹாவில் கொள்ளை

கம்பஹாபிரதேசத்தில்உள்ளநகை அடகுக் கடை ஒன்றில் கொள்ளை சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.20 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

அடகுக் கடையை திறக்கும் போது கூரிய ஆயுதங்களுடன் வந்த இருவர் கடை உரிமையாளரை அச்சுறுத்தி கொள்ளையிட்டுதப்பிச்சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் 175 லட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் 10 முதல் 15 லட்சம் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## அ’புரம், களுத்துறையில் மாணவிகளிடம் போதை மாத்திரை பாவனை அதிகரிப்பு

அநுராதபுரம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள மாணவிகளிடம் போதை மாத்திரைகள் பாவனை அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவவிசேடஅதிரடிப்படை முகாமிற்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளுடன் அநுராதபுரத்தில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தகைய போதை மாத்திரைகளை பெற்றுக்கொள்ளத் தேவையான பணத்திற்காக சில மாணவிகள் பாலியல் ரீதியான தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம் அநுராதபுரத்தில் நடத்திய விசேட நிகழ்வொன்றிலேயே அநுராதபுரம்போன்றேகளுத்துறை மாவட்டத்திலும் மாணவிகளிடம் போதை மாத்திரைகள் பாவனை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (05)



# லொறியால் மோதிய வயோதிபரை வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற வழியில் கைவிட்டு தப்பிய சாரதி கைது

பூகொடை பிரதேசத்தில் நபரொருவர் மீது லொறி மோதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாகக் கூறி வழியில் விட்டுவிட்டு தப்பிச்சென்ற லொறி சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் பிரதேச வாசிகளால் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பெபிலியவல பிரதேசத்தைச் சேர்ந்த 83 வயதுடையவராவார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய லொறி சாரதி ஹோமாகம பிரதேசத்தில் வைத்து விபத்தில் சேதமடைந்த லொறியை சரிசெய்து கொண்டிருக்கும் போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# கேரளா கஞ்சாவுடன் ஒருவர் பேலியகொடையில் கைது

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கேரளா கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பேலியகொடை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடையவராவார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனையில் 2 கிலோ கிராம் நிறையுடைய கேரளா கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2023இல் வெளியிடப்பெற்றது.